**சிறுகதை**

## பல(ய)மறியாத காட்டெருமைகள்

***திரு.ப. பரமதேவன்***
*சிரேஷ்ட விரிவுரையாளர்*
*கணிதத்துறை*
*விஞ்ஞான பீடம்*
*கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை*

*பலம்பொருந்திய அந்தச்சிங்கம் தனது கொடூர பற்களுக்குள் அகப்பட்டுத் துடித்துக்கொண்டிருக்கும் அந்த காட்டெருமையின் குரல்வளையை மேலும் நெருக்குகின்றது. அதேவேளை தன் எதிரே நின்று கொண்டிருக்கும் எருமைக்கூட்டத்தினையும் தனக்குள்ளே ஏற்பட்டுள்ள ஒருவகை அச்சத்துடன் அவதானித்துக்கொள்கின்றது. அவற்றுட் சில தன்னை நோக்கி வர எத்தனிப்பதனையும் பின் அவை மற்ற எருமைகளைப் பார்த்து பினவாங்குவதையும் இன்னும் சில துாரத்தில் நின்று வாலாட்டிக்கொண்டு தன்னைப்பார்த்துக் கொண்டிருப்பதையும் மேலும் சில தமக்கும் இங்கு நடக்கும் சம்பவத்துக்கும் ஒரு தொடர்பும் அற்றதுபோல் புல் மேய்ந்து கொண்டிருப்பதையும் அவதானித்து தன்னைத்தானே சுதாகரித்துக் கொள்கின்றது.*

*எனினும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனக்கு இந்த எருமைகளினால் ஆபத்து நேரலாம் என்ற பீதி அச்சிங்கத்தினை ஒரு பக்கம் குலை நடுங்க வைத்தாலும் அவை என்றுதான் தனக்கெதிராக ஒன்று சேர்ந்திருக்கின்றன என்ற ஒரு சிறிய நம்பிக்கையின் தைரியத்திலே தன்னிடம் மாட்டிய எருமையின் குரல்வளையை மேலும் நெருக்குகின்றது. இக் கூட்டத்தில் ஏதாவது ஓரிரு எருமைகள் துணிந்தால் தன்னைத் தாக்கிவிட முடியும். அதனது பலமான கொம்பினால் தனது வயிற்றைக் குத்திக் கிழித்து எத்தி எறிந்துவிட முடியும் என்ற பீதி மேலோங்கிக்கொண்டிருக்கின்றது. அவ்வாறான சம்பவங்களும் இந்தக் காட்டில் நடக்காமல் இல்லை. இந்த அச்சந்தான் சிங்கத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது.*

*உயிருக்கு போாாடிக்கொண்டிருக்கும் எருமையோ தனது இறுதித் தருணத்திலும் பெருமிதப் பட்டுக்கொண்டிருக்கின்றது. தான் எவ்வாறு இந்தச் சிங்கத்திடம் அகப்பட்டுப்பட்டுக்கொண்டேன் என்பதை நினைத்துப் பார்க்கின்றது. இந்த நுாற்றுக்கணக்கான எருமைகளைக்கொண்ட தனது கூட்டத்தில் ஒரு எருமையையாவது எப்படியேனும் பிடித்து விடவேண்டும் என்ற நோக்கத்தில்*

இந்தச்சிங்கம் தனது கூட்டத்தை துரத்திக் கொண்டிருக்கும் போது தான் ஓட்டத்தை நிறுத்தி அச்சிங்கத்தை எதிர்கொண்ட அக்கணத்தை நினைத்துப்பார்க்கின்றது. என்றோ ஒரு நாள் தனது உயிர் பிரியத்தான் போகின்றது ஆனால் அது தனது இனத்தின் இன்னோர் உயிரை காப்பதற்காகப் பிரியப் போவதை எண்ணி பெருமிதம் கொள்கின்றது. இருப்பினும் இன்னும் ஒன்றும் குடிமுழுகிப்போகவில்லை ஒரு சிலவேளை தன்னைப் போல எண்ணம்கொண்ட தனது கூட்டத்திலிருந்து ஒருசில துணிவுள்ள எருமைகள் தன்னினத்தைக் காக்க இந்தச் சிங்கத்தை மாறித் தாக்க வந்தால் நான் பிழைத்துவிட வாய்ப்பு இன்னும் உள்ளது. ஏன் இந்த நிலமையை தலைகீழரக மாற்றி இந்த சிங்கத்தைக் கூட கொன்று விடலாம் என்றும் எண்ணுகின்றது. ஆனால் தங்களது கொம்புகளில் அவ்வளவு பலம்பொருக்திய காட்டெருமைகளோ தங்களது பலத்தையும் உணராது சிங்கத்தினது பயத்தையும் அறியாது புல் மேய்ந்து கொண்டே இருக்கின்றன.

யாவும் கற்பனையே!

